செய்தி வெளியீடு எண். 214 நாள்: 18.04.2018

## திருவள்ளூர் மாவட்டத்தில் 1427-ம் பசலிக்கான வருவாய் தீர்வாய கணக்கு முடிப்பு அனைத்து வட்டங்களிலும் மே-02 முதல் தொடங்கி நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு

திருவள்ளூர் மாவட்டத்தில் 1427-ம் பசலிக்கான வருவாய் தீர்வாய கணக்கு முடிப்பு, பள்ளிப்பட்டு வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்களாலும், திருவள்ளூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களாலும் ஏனைய வட்டங்களில் கீழ்க்குறிப்பிட்டுள்ள வருவாய்த்துறை அலுவலர்களாலும் 02.05.2018 முதல் தொடங்கி அரசு விடுமுறை நாட்கள் மற்றும் வாரத்தின் முதல் நாள் திங்கட்கிழமை தவிர்த்து இதர நாட்களில் நடத்தப்படும்.

| வ. எண். | வட்டத்தின் பெயர் | வருவாய் தீர்வாய அலுவலர் பெயர் | வருவாய் தீர்வாயம் நடைபெறும் நாட்கள் |
|---|---|---|---|
| 1 | பள்ளிப்பட்டு | திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள்<br>மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் | **மே 2018**<br>02, 03, 04, 08, 09, 10, 11, 15, 16, |
| 2 | திருவள்ளூர் | திரு.து.சந்திரன் அவர்கள்<br>மாவட்ட வருவாய் அலுவலர், திருவளளூர் | **மே 2018**<br>02, 03, 04, 08, 09, 10, 11, 15, 16, 17, 18, 22 |
| 3 | அம்பத்தூர் | திரு.ர.சக்திவேல், அவர்கள்<br>மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருவள்ளூர் | **மே 2018**<br>02, 03 |
| 4 | பூந்தமல்லி | திருமதி. கெ.ரா. திவ்யஸ்ரீ, அவர்கள்<br>வருவாய் கோட்டாட்சியர், திருவள்ளூர் | **மே 2018**<br>02, 03, 04, 08, 09 |
| 5 | கும்மிடிப்பூண்டி | திரு.வி.முத்துசாமி அவர்கள்<br>வருவாய் கோட்டாட்சியர், பொன்னேரி | **மே 2018**<br>02, 03, 04, 08, 09, 10, 11 |
| 6 | திருத்தணி | திரு.பெ.ஜெயராமன் அவர்கள்<br>வருவாய் கோட்டாட்சியர், திருத்தணி | **மே 2018**<br>02, 03, 04, 08, 09, 10, 11, 15, 16 |
| 7 | மதுரவாயல் | திரு.இரா.பன்னீர்செல்வம் அவர்கள்<br>வருவாய் கோட்டாட்சியர், அம்பத்தூர் | **மே 2018**<br>02, 03, 04 |
| 8 | பொன்னேரி | திரு. ஆர். ரூபன்தாஸ், அவர்கள்<br>மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபாண்மையினர் நல அலுவலர்,<br>திருவள்ளூர் | **மே 2018**<br>02, 03, 04, 08, 09, 10, 11, 15, 16, 17, 18, 22, 23, 24 |

| | | | |
|---|---|---|---|
| 9 | ஆவடி | திரு. மா. நாராயணன் அவர்கள்<br>மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், திருவள்ளுர் | <u>மே 2018</u><br>02, 03, 04, 08, 09 |
| 10 | மாதவரம் | திருமதி. செ. மணிலா, அவர்கள்<br>மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்), திருவள்ளுர் | <u>மே 2018</u><br>02, 03, 04, 08 |
| 11 | ஊத்துக்கோட்டை | திரு. எஸ். சுரேஷ்குமார் அவர்கள்<br>உதவி ஆணையர் (கலால்) திருவள்ளுர் | <u>மே 2018</u><br>02, 03, 04, 08, 09, 10, 11 |
| 12 | திருவொற்றியூர் | திரு. சீ.ஜானகிராமன் அவர்கள்<br>தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி)<br>திருவள்ளுர் | <u>மே 2018</u><br>02, 03, 04, 08 |

வருவாய் தீர்வாயம் பிரதி தினமும் காலை 9 மணி அளவில் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களில் ஆரம்பிக்கப்படும். பட்டா நகல் கோரும் பட்டாதாரர்கள் வருவாய்த் தீர்வாயத்தில் மனுக் கொடுத்து பட்டா நகல் பெற்றுக் கொள்ளலாம். பட்டா மாறுதல் மற்றும் பொது மக்களின் இதர குறைகள் சம்மந்தமான மனுக்களும் பெற்றுக் கொள்ளப்படும். வருவாய்த் தீர்வாயம் முடிவு பெறும் கடைசி நாளன்று ரயத்துக்களின் கூட்டம் வருவாய்த் தீர்வாயம் நடத்தும் அலுவலரால் நடத்தப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**